**அம்பலாங்கொடை பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, அம்பலாங்கொடை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது அட்டம்பகஹ சந்தி சனசமூக நிலையத்தினை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 156,756 தொகை, புரநெகும செயற்திட்டத்தின் கீழ் தலைமை அலுவலகத்தின் அறைகள் ஒதுக்குவதற்காக செலவிடப்பட்டிருந்தத ரூபா 250,442 தொகை மற்றும் ரூபா 21,825 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த கமரா ஒன்றின் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 64,062 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 28,564 தொகைக்கான நுகர்வுப் பண்டங்கள், கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 4,015,095 தொகையினை கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு

கணக்கு விடயம் ஒன்று தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 32,841,200 இற்காக மீதி மற்றும் துணைப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள மீதி இடையே ரூபா 510,713 இற்காக வித்தியாசம் காணப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 ஆண்டிற்கான நிர்மான வேலைக் கடன்பட்டோர்களின் கீழ் பெற வேண்டிய ரூபா 75,426 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2008 ஆண்டு முதல் முன் கொண்டுவரப்படும் பெற வேண்டிய வைப்புக்கள் ரூபா 47,466 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2014 ஆண்டின் போது நிர்மாண வேலை மேற்கொள்வதற்காக ஒப்பந்த வேலை கம்பனிகளுக்கு தார் வழங்குவது தொடர்பாக பெற வேண்டிய ரூபா 2,791,487 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2015 ஆண்டு முதல் 19 நிர்மாண வேலை கடன் கொடுத்தோர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 15,260,488 தொகையினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையினால் ரூபா 83,145,517 இற்கான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) விதி 33 | - | ஏக்கர் வரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர்பான அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (ii) விதி 164 | - | சபையின் கணக்கு ஆவணங்களை நாளாந்தம் பரிசோதனை செய்யப்பட்டு அதில் அடங்கியுள்ள பதிவுகள் சரியானவை என சுருக்க கையொப்பம் இடப்பட்டு சான்றுபடுத்தியிருக்க வில்லை. |
| | (iii) விதி 184 | - | பிணைகள் வைக்க வேண்டிய 06 உத்தியோகத்தர்களிடம் பிணை பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) விதி 196 | - | டயர்கள் மற்றும் தார் வழங்குதல் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (v) விதி 218 | - | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒருமுறை பரிசோதனை செய்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(1)(2) | 2,853,449 | 02 வருடங்களை மிகைத்துள்ள 82 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,607,197 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,771,711 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான 03 நடைமுறைக் கணக்குகளில் ரூபா 52,468,452 இற்கான மாதாந்த சராசரி மீதியொன்று காணப்பட்ட போதிலும், அந்த மிகைப் பணத்தை முதலீடு செய்து, வட்டி வருமானம் உழைப்பது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 18,000 | 16,325 | 3,879 | 213,006 | 18,000 | 16,325 | 7,225 | 199,935 |
| (ii) வாடகை | 2,600,000 | 2,300,060 | 1,781,705 | 561,697 | 2,000,000 | 2,058,560 | 2,477,794 | 42,070 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,600,000 | 1,328,260 | 1,216,285 | 111,975 | 1,300,000 | 1,364,400 | 1,165,560 | 198,840 |
| மொத்தம் | 4,218,000 | 3,644,645 | 3,001,869 | 886,678 | 3,318,000 | 3,439,285 | 3,650,579 | 440,845 |

### 2.3.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்காக சபையின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 4,218,000 தொகை மற்றும் சிட்டையிடப்பட்டவை ரூபா 3,644,645 தொகையாக காணப்பட்டது அதன் பிரகாரம் மொத்த மதிப்பீட்டு வருமானத்தின் சிட்டையிடப்பட்ட வருமானம் 86 சதவீதமாக இருந்ததுடன், மொத்த சிட்டை இடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் 82 சதவீதமாகும்.

### 2.3.3 வீத வரி மற்றும் ஏக்கர் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்டவைகளில் சேகரிப்புக்கள் 24 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 199,935 தொகைக்கான ஏக்கர் வரி மீதி வருட இறுதி அளவில் ரூபா 213,006 தொகை ஆகக் காணப்பட்டமையினால் ஆரம்ப மீதிக்கு ஒப்பாக நிலுவை 06 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் பிரதான வருமான வழியான ஏக்கர் வரி சிட்டையிடல் 2017 ஆண்டின் போது ரூபா 16,325 தொகை இற்கான சிறிய பெறுமதியினை கொண்டிருந்தது. ஏக்கர் வரி பதிவேட்டின் பிரகாரம் 311 ஆதன உரிமையாளர்கள் இருந்த போதிலும், 11 ஆதன ஊழியர்கள் மாத்திரம் நாளதுவரை ஏக்கர் வரி செலுத்தியிருந்தனர்.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 111,975 இற்கான நிலுவை மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், நிலுவை வருமானம் அறவீடு செய்தல் தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயளாலரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,129,737 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 27,114,680 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேசசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 16 செயல்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரித்திருக்கப்பட்டிருந்த போதிலும், அதில் குறிப்பிடப்பட்டிருந்த செய்பணிகள் ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) எதிர்ப்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற்றுக் கொள்ளாமை

சபைக்கு சொந்தமான மீடியாகொட ஆயர்வேத மருந்தகம் 2017 ஆண்டு பூராகவும் மூடப்பட்டிருந்த காரணத்தினால் சபையின் அதிகார பிரதேசத்தில் வதியும் பொது மக்கள் எதிர்ப்பாத்த சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

#### (இ) திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்

சபைக்கு சொந்தமான சுமார் 40 பர்சஸ் தெல்கஹபெத்த காணிக்கு ஒரு நாளைக்கு 03 தொன் அளவு உக்கக் கூடிய மற்றும் உக்காதவை என வகைப்படுத்தி குப்பைகள் போடப்பட்டு வந்தது. உக்கக்கூடிய குப்பைகளைப் பயன்படுத்தி காபனிக் உரம் உற்பத்தி செய்யப்படுவதுடன், உர உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் செயற்படாமையின் காரணத்தினால் 02 மாத காலமாக உர உற்பத்தி இடைநிறுத்தப்பட்டிருந்தது. உக்காத குப்பைகளில் பாரிய அளவில் குவிக்கப்பட்டிருந்ததுடன், குப்பை போடப்படும் காணிக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

#### (உ) நிறைவேற்றப்படாத செய்பணிகள்

2016 ஆண்டின் தென்மாகாண அபிவிருத்தி திட்டத்தினை நெறிமுறை அடிப்படை மானியங்களில் கீழ் மெடிவல ஹபுதன்திரீகே வத்த முதலாம் ஒழுங்கையை அபிவிருத்தி

செய்வதற்காக ரூபா 1,650,000 தொகை கிடைக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தினன் பிரிவு 134(1) மற்றும் (2) பிரிவுகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பகுதிகளில் நகர மற்றும் நகரத்தை சேர்ந்த பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு இயலுமாக இருந்த போதிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ii) சபையினால் வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக மின்சார சபையுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டமையால் 2017 ஆண்டின் போது வீதி விளக்குகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,468,697 இற்கான செலவுகள் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதவியணித் திட்டத்தின் பிரகாரம் 06 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் 24 மிகை ஊழியர்களை முறைப்படுத்துவற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2014 நவம்பர் 12 திகதி 25/2014 இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு முரணாக சபையினால் பிரதியீட்டு அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 14 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,599,436 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஊழியர் கடன்**

சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள, வெளிநாடு சென்றுள்ள, சேவையை விட்டு சென்றுள்ள மற்றும் இறந்துள்ள ஊழியர்கள் 12 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 195,869 தொகை 1997 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரை முன்கொண்டு வந்து காணப்பட்டதுடன் குறிப்பிட்ட ஊழியர்களிடம் அல்லது பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை**

1994 ஆண்டின் போது மற்றும் 2000 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 833,900 தொகைக்கான 02 கை டிரக்டர்கள் பழுதுபார்த்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்ட போதிலும், அவ்வாறு செய்யாமல் இயற்கை அனர்த்தங்களுக்கு ஆளாகுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2008 ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 750,000 தொகை பெறுமதியான கப் வண்டி விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 03 வருட காலம் முதல் சேதனப் பசளை செயற்திட்ட கட்டிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த 02 டிரெக்டர் டெய்லர் வாகனங்களை பழுதுபார்த்து குப்பை சேகரிப்பதற்காகப் பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4.3 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை

சபைக்கு சொந்தமாக இருந்த பொதுச் சந்தையின் மேல்மாடியில் 02 கடைகள் மின்சார வசதிகள் இன்மையால் மூடப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு கடையின் ரோலர் கதவு உடைந்து வீழ்ந்து இருந்ததுடன், கடைகளுக்காக காணப்படும் கழிவறை பல வருட காலமாகப் பராமரிக்கப்படாமையினால் பயன்படுத்த இயலாத நிலையில் காணப்பட்டது.

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

சபையினால் 2017 ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 09 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 19,741,991 இற்கான சேமிப்புகள் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 09 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 06 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்காகிய வருமானத்தின் கூட்டுத் தொகை ரூபா 15,008,434 தொகை ஆக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 03 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

தென் மாகாண, உள்ளூராட்சி சபை ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 ஜூன் 09 ஆம் திகதியில் DMA/2009(i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமனம் செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதிவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | நிலையான சொத்துகள் பதிவேடு பேணப்பட்டிருக்காமை. |
| | | (ii) | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்வதில் பலவீனம் காணப்படல். |
| | | (ii) | பதவியணிக் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (iii) | ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிய காணிகளை சரியாக இனங்காணாமை. |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | வாகனங்கள் தொடர்பாக மாதாந்தப் பொழிப்பு தயாரித்திருக்காமை. |